

விளாத்திகுளம் தொமுச செயலாளர், மேற்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் மாரிமுத்து அவர்களது இல்ல திருமணவிழாவில் தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் பி.கீதாஜீவன் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் கோவில்பட்டி சட்டமன்ற உறுப்பினர் கா.கருணாநிதி மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள் உடன் உள்ளனர்.



ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்குரலாய் வாழ்ந்து மறைந்த தியாகி இம்மானுவேல் சேகரனாரின் நினைவு தினத்தை முன்னிட்டு, புதூர் மத்திய ஒன்றியம், நாகலாபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள அன்னாரின் திருஉருவப்படத்திற்கு விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ.வி.மார்கண்டேயன் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். நிகழ்வில் புதூர் மத்திய ஒன்றிய செயலாளர் ராதாகிருஷ்ணன், கிளைச் செயலாளர் சதீஷ்குமார், அவைத் தலைவர் ஜெயராஜ், முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர் கனக ஜோதி, சௌந்தரபாண்டி, முன்னாள் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் காளிமுத்து, கழக நிர்வாகி தங்கமுத்து உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### டாக்டர் கொ.நந்தகோபாலகிருஷ்ணன், சபா.இராசேந்திரன் பங்கேற்பு

# கடலூர் மேற்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம்!

## சி.வெ.கணேசன் எம்.எல்.ஏ. – கலாநிதி வீராசாமி எம்.பி. – ப.பரிதிஇளம்சுருதி சிறப்புரை!

கடலூர், செப்டம்பர்,14–

கடலூர் மேற்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம், நெய்வேலி தொமுச அலுவலகத்தில், 12.9.2026, சனிக்கிழமை மதியம் 1 மணியளவில், மாவட்ட கழக அவைத் தலைவர் டாக்டர் கொ.நந்தகோபாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.

பண்ருட்டி தெற்கு ஒன்றிய கழக செயலாளர் ,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சபா .இராஜேந்திரன் முன்னிலை வகித்தார்.

மாவட்ட கழக செயலாளர் சி.வெ. கணேசன் எம் .எல் .ஏ , தலைமை கழக பிரதிநிதிகள் கழக அயலக அணி தலைவர் டாக்டர். கலாநிதி வீராசாமி எம் .பி, கழக அயலக அணி துணை செயலாளர் ப .பரிதி இளம் சுருதி சிறப்புரையாற்றினர்.

மாவட்ட கழக துணை செயலாளர்கள் ஆர்.எஸ்.எம். தணிகைசெல்வம், ஆனந்தி சரவணன், பொருளாளர் கோ. தண்டபாணி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் பா. பாவாடை கோவிந்தசாமி,

வி .கே .வெங்கட்ராமன் பொதுக்குழு உறுப்பினர்கள் என்.பலராமன், ஆர்.பாலகிருஷ்ணன், ஆர்.இராதாகிருஷ்ணன் க.ராஜேந்திரன், செந்தமிழ் செல்வி கருப்புசாமி, ஒன்றிய கழக செயலாளர்கள் வி.அமிர்தலிங்கம், பா.செங்குட்டுவன், த. சின்னசாமி, சிவ.தியாகராஜன், கனக.கோவிந்தசாமி, தி.வேல்முருகன், என்.ஆசைதம்பி, ப. சுரேஷ், அ.குணசேகரன், இரா. சந்தோஷ்குமார், இராமச்சந்திரன்,

நகர கழக செயலாளர்கள் க. இராஜேந்திரன், ப.மணி வண்ணன் க.தண்டபாணி, ப.பரம குரு, வி.குருநாதன்,

பேரூர் கழக செயலாளர்கள் ஆர்.சுந்தர வடிவேல், வ.ஜெயமூர்த்தி, ம.குமாரவேல், சி.செல்வம் (எ) பாலசுப்பிரமணியன்,

மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.எஸ்.கணேஷ்குமார் ஆதிதிராவிடர் அணி ராமு,மாணவரணி சதீஷ்குமார்,வழக்கறிஞர் அணி அருள்குமார், பாரி இப்ராஹிம், பகுத்தறிவு பேரவை வழக்கறிஞர் மதனகுரு, தகவல் தொழில்நுட்ப அணி ஆனந்த்,மருத்துவர் அணி ஆர்.ராஜேஷ்,வர்த்தகர் அணி ப.குணா,எம்.எஸ்.ராம்குமார்,

மகளிரணி ஜெயந்தி நடராஜன்,சிறுபான்மையினர் அணி அன்சார் அலி,முகமது யூசப், என்.எல்.சி தொ.மு.ச தலைவர் ஞா.ஞானஒளி,பொருளாளர் அப்துல் மஜீத்,அலுவலக செயலாளர் சீனிவாசன்,

மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ராஜேஷ்,துரைராஜ், தங்க.நாராயணசாமி,ஆ.சதாம் செந்தில்குமார், மற்றும் தங்க.அன்பழகன், சாமிநாதன்,டி.குணா, க. சேகர்,கோனூர் மதியழகன்,வழக்கறிஞர் நாராயணன் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய,நகர, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகி கள் கலந்துக் கொண்டனர்,

இச்செயற்க்குழுக்கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது,

திராவிட நாயகன் தியாகத்தின் திருவுருவம் முன்னாள் முதல்வர் கழகத் தலைவர் தளபதி மு .க .ஸ்டாலின் அவர்களை அசிங்கப்படுத்துவது ஒன்றையே குறிக்கோளாக விஜய் செய்து வருகிறார் .நமது தலைவர் மிசாவில் கைது செய்யப்பட்டு ஓராண்டு காலம் சிறையில் இருந்ததை கொச்சைப்படுத்தி தனது செய்கையை சட்டமன்றத்தில் அரங்கேற்றி அதன் மாண்பை சீர்குலைத்ததை இச்செயற்குழு வன்மையாக கண்டிப்பதுடன் ,தமிழக மக்களின் நலன் ஒன்றையே தான் வாழ்நாள் குறிக்கோ ளாக கொண்டு செயல்பட்டு வரும் கழக தலைவர் தளபதி மு.க .ஸ்டாலின் அவர்களிடம் விஜய் பகிரங்க மன்னிப்பு கேடக வேண்டும் எனவும் ,இது தொடர்பாக சட்டமன்றத்தில் பேசிய அனைத்தையும் திரும்ப பெறவும், இவை அனைத்தும் சட்டமன்ற குறிப்புகளில் இருந்து நீக்கப்பட வேண்டும் என இச்செயற்க் குழு கேட்டுக் கொள்கிறது.

கடந்த 22 .8 .2026 அன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தலைமை செயற்குழு தீர்மானத்தின் படி ஒன்றிய ,நகர, பேரூர் மற்றும் கிளை கழகங்களின் நிர்வாக அமைப்புகளை மறு சீரமைக்கும் பணியினை சிறப்பாக மேற்கொள்ளும் பொருட்டு தலைமை கழகம் அறிவித்துள்ள பிரதி நிதிகளின் முன்னிலையில் சம்பந்தப்பட்ட ஒன்றிய ,நகர ,பேரூர் மற்றும் கிளை கழகங்களை முறைப்படுத்தி, நிர்வாகப் பகுதிகளை சீரமைக்கும் பணிகளை மேற்கொள்ள கழக நிர்வாகிகளுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

மேலும் முறையாக ஆய்வு செய்து சீரான முறையில் நிர்வாக பிரிவுகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்ளப் படுவதுடன் தலைமை க்கழகத்தால் நியமிக்கப்பட்டுள்ள பிரதிநிதிகள், சம்பந்தப்பட்ட மாவட்ட கழக நிர்வாகிகள் மற்றும் உள்ளூர் கழக நிர்வாகிகளுடன் கலந்து ஆலோசித்து சீரமைப்பு பணிகளை கண்காணித்து வழிகாட்ட வேண்டுமான இக்கூட்டம் கழக நிர்வாகி களை கேட்டுக் கொள்கிறது .

மறு சீரமைக்கப்பட்ட ஒன்றிய ,நகர, பேரூர் மற்றும் கிளை கழகங்களின் விவரங்களையும் வாக்காளர்களின் எண்ணிக்கையும் அடிப்படையில் முறையாக பிரிக்கப்பட்ட விவரங்களுடன் சம்பந்தப்பட்ட மாவட்ட கழக நிர்வாகத்திடம் வழங்கிட வேண்டுமெனவும்,

மாவட்ட கழக நிர்வாகம் அவற்றை ஆய்வு செய்து தேவையான பரிந்துரைகளுடன் தலைமை கழகத்தின் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டுமென இச்செயற்குழு தீர்மானிக்கிறது ,,.

எதிர்வரும் 15. 9 .2026 அன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற உள்ள முப்பெரும் விழாவில் தந்தை பெரியார் ,பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர், இனமான பேராசிரியர் ,பாவேந்தர் பாரதிதாசன், தளபதி

மு .க .ஸ்டாலின் ,முரசொலி செல்வம் ஆகியோர்களின் பெயர்களில் விருதுகள் பெற உள்ள கழக முன்னோடிகளுக்கு இச் செயற்குழு தனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

15 .9. 2026 அன்று பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் பிறந்த நாளையும் ,கழகம் தோன்றிய நாள் மற்றும் 17 .9. 2026 அன்று பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாளையும் ,

நமது கடலூர் மேற்கு மாவட்ட கழகத்திற்கு உட்பட்ட ஒன்றிய ,நகர, பேரூர் மற்றும் கிளை கழகங்களின் சார்பில் மிகவும் சிறப்பாக கொண்டாடுவது என தீர்மானிக்கப்பட்டது .

மேலும் சென்னையில் நடைபெறும் முப்பெரும் விழாவில் நமது மாவட்டத்தின் சார்பில் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது .

இவ்வாறு கடலூர் மேற்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது

### 118–வது பிறந்த நாள்: மதுரை மாநகர் மாவட்டக் கழகம் சார்பில்

# பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை!

## மாவட்டச் செயலாளர் கோ.தளபதி வேண்டுகோள்!



மதுரை, செப். 13–

பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் 118–வது பிறந்த நாளை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவிக்கப்படுகிறது. எனவே மதுரை மாநகர் மாவட்டக் கழகத் தோழர்கள் திரளாகப் பங்கேற்குமாறு மாவட்டச் செயலாளர் கோ.தளபதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

கடமை கண்ணியம் கட்டுப்பாடு !!! என்ற தாரக மந்திரத்துக்கு சொந்தக்காரர், ”பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி அவர்கள் தலைமையில் 15.09.2026 செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணியளவில் நெல்பேட்டையில் உள்ள ”பேரறிஞர் அண்ணா அவர்களின்திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட உள்ளது.

இந்நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட கழக நிர்வாகி கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக, வட்ட கழக செயலாளர்கள், அணி அமைப்பாளர்கள் , துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக உடன்பிறப்புகள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்கு மாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### வேலூர் மாவட்டம் : காட்பாடி தெற்கு பகுதி தி.மு.க. சார்பில்

# மறுசீராய்வு குறித்த கலந்துரையாடல் கூட்டம்!

## முதல்வர் விஜய்யை கண்டித்து தீர்மானம் நிறைவேற்றம்!

வேலூர்,செப், 14–

வேலூர் மாவட்டம் காட்பாடி தெற்கு பகுதி திமுக சார்பில் மறுசீராய்வு குறித்த கலந்துரையாடல் கூட்டம் ஆதிலட்சுமி தெய்வசிகாமணி திருமண மண்டபத்தில் நடந்தது.

தீர்மானம்:1

இரங்கல் தீர்மானம்

கடந்த 1707 2026 அன்று மறைந்த மாவட்ட பிரதிநிதியும், தலைமை கழக பேச்சளாருமான கே. ஏ. கண்ணனுக்கு. பகுதி கழகம் சார்பில் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

தீர்மானங்கள் வருமாறு:–

தீர்மானம்:2

நடைபெற்ற சட்டப் பேரவை நிகழ்வில் தமிழ் நாட்டின் முதலமைச்சர் ஜோசப் விஜயின் காவல் துறை மற்றும் தீயணைப்புத் துறை மானியக் கோரிக் கையில் பதிலளிக்கும் விவாதத்தில் நம் கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களையும், இளந்தலைவர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலினையும் கொச்சைப்படுத்தும் வார்த்தைகளால் பேசியதற்கு இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது.

தீர்மானம் :3 பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளான செப்டம்பர் 15 அன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற உள்ள முப்பெரும் விழாவில் வேலூர் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர். டி. எம். கதிர் ஆனந்த் தலைமையில் அனைத்து நிர்வாகிகளும் மற்றும் கழக உறுப்பினர்கள் அனைவரும் பெரும் திரளாக கலந்து கொள்வது என்று இக்கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

தீர்மானம் 4: காட்பாடி தெற்குபகுதி தி.மு.க 2020ம் ஆண்டு புதியதாக பிரிக்கப்பட்டு தற்போது வரை செயல் பாட்டில் உள்ளது. வார்டு எண்கள் 6, 8, 11, 12 மற்றும் 13 ஆகிய வார்டுகளை உள்ளடக்கிய பகுதி கழகமாக செயல்பட்டு வருகிறது. இதில் தற்போது முப்பதாயிரம் வாக்குகளுக்கும் குறைவாகவே உள்ளது. ஆகவே, இந்தப் பகுதியை எந்தவித மாற்றமும் செய்யாமல், தற்பொழுது உள்ள வட்டங்களின் அடிப்படையில் பகுதி கழகம் செயல்பட மாவட்டக் கழகமும், தலைமைக் கழகமும் அனுமதி வழங்கிட வேண்டுமென பகுதி கழக மற்றும் வட்டக்கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் அனைவராலும் ஏக மனதாக தீர்மானிக்கப்படு கிறது. காட்பாடி பகுதி உள்ளடங்கிய வார்டுகளின் வரைபடம். மற்றும் வாக்காளர்களின் விவரங்கள் தெற்கு இணைக்கப்பட்டுள்ளது.

தீர்மானம் :5 வார்டு எண் 6ல் 10 பாகங்களில் 7000 வாக்குகள் உள்ளன. இதில் 6 பாகம் எண் ( பாகம் எண்கள் 211, 212, 213, 216, 217, 218) 4000 வாக்குகள் ஒரு வட்டமாகவும், மற்றும் 4 பாகங்கள் (பாகம் எண்கள். 209,210,214,215) 3000 வாக்குகள் ஒரு வட்டமாகவும் கழக நிர்வாக வசதிக்காக பிரிக்க 6வது வார்டு நிர்வாகிகள் அணைவரும் ஏக மனதாக தீர்மானிக்கப் படுகிறது.

தீர்மானம் : 6 வட்டங்கள் 8, 11, 12 மற்றும் 13 ஆகிய வட்டங்களில் ஏறத்தாழ 6000 வாக்குகளுக்கு குறைவாகவே உள்ளதால், 5000 வாக்குகளுக்கு மேல் உள்ள வட்டங்களை பிரிக்க வேண்டும் என தலைமை கழகம் வழங்கிய அறிவுறுத்தலை தளர்வு செய்து மேற்படி வட்டங்களில் எந்த மாற்றமும் செய்யாமல் தற்போது உள்ள படியே வட்ட கழகங்கள் செயல்பட மாவட்ட கழகம் மற்றும் தலைமை கழகம் அனுமதி வழங்கிட வேண்டுமென பகுதி கழக, வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் அனைவரும் ஏக மனதாக தீர்மானிக்கப்படு கிறது.

தீர்மானம்:7 சட்டமன்றத்தில் முதலமைச்சர் விஜயின் ஆணவப் பேச்சைக் கண்டித்தும், சோபா மாடல் அரசை கண்டித்தும் சனிக்கிழமை வரும் 12092026 நடைபெறும்.கண்டன ஆர்பாட்டத்தில் காட்பாடி தெற்கு பகுதி தி.மு.க சார்பாக அனைவரும் பெரும் திரளாக கலந்து கொள்வது என ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

தீர்மானம்: 8 நடைபெற இருக்கும் சட்டப் பேரவை இடைத்தோ்தலில் 2026 மதச்சார்பற்ற முற்போக்கு கூடட்டணி சார்பில் போட்டியிடும் தி.மு.கழக வேட்பாளர்களை வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க விற்கு ஒதுக்கும் பூத்துகளில் நம் தெற்கு பகுதி தி.மு.க சார்பில் அனைவரும் சென்று பணியாற்றி வெற்றிக்கு அயராது உழைப்போம் என இக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப் படுகிறது.

தீர்மாணம் :9. இந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட அனைத்து முடிவுகளையும் நகலெடுத்து கழக தலைவர். பொதுச்செயலாளர், மாவட்ட செயலாளர். தலைமை கழக பிரதிநிதிகள் இ.கருணாதி மற்றும் தாயகம் ப. கவி ஆகியோர் அனுப்பிநம் பகுதிகுட்பட்ட அனைத்து நிர்வாகி கள் சார்பாக மறு சீராய்வில் தலைமை கழகம் அறிவுறுத்தலின் பேரில் நடைப்பெற்ற இக்கூட்டத்தின் முடிவில் நகலை தெரிவித்து தலைமை கழகம் எடுக்கும் முடிவிற்கு அனைவரும் கட்டுப்படுவோம் என்று தெரிவித்துக் கொள்கிறோம்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மயிலை ந.பு.இராமஜெயம்

### செப்டம்பர் 14 (2007)



இளமைக்காலத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

வட்ட மற்றும் பகுதி அவைத் தலைவராகவும் பின்னர், பகுதிக் கழகச் செயலாளராகவும், தென்சென்னை மாவட்ட அவைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

1996ஆம் ஆண்டு மயிலை தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

இந்து நாளிதழ் தொழிற்சங்கத்தில் தொடர்ந்து 35 ஆண்டுகள் பொதுச்செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர்.

“நான் மதிக்கின்ற, போற்றுகின்ற, புகழ்கின்ற, பாராட்டுகின்ற, என்நெஞ்சில் வைத்து நினைத்து மகிழ்கின்ற ஒரு தொண்டன் ராமஜெயம்” என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அ.கிட்டு (எ) கிருஷ்ணன்

### செப்டம்பர் 14 (2017)



திராவிடர் கழகத்தில் பணியாற்றி, கழகம் துவங்கியவுடன் அதில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.

1957ல் பேராசிரியர் அன்பழகனார் அவர்களைஅழைத்து வந்து அம்மாபேட்டை கிளைக் கழகத்தை உருவாக்கி அப்பகுதியில் கழகத்தை வளர்த்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.